# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 241/நகராட்சி/2018**

**நாள் : 24/12/2018**

**உரிமம் பெற்ற நில அளவையர் சங்கம்,**
**தாம்பரம் –45.** – **முறையீட்டு மனுதாரர்**

**திரு S. குமார்,**
**நகரமைப்பு ஆய்வாளர்,**
**தாம்பரம் நகராட்சி.** – **எதிர் மனுதாரர்**

சென்னை, தாம்பரம் மேற்கு, எண்.33, சிவசண்முகம் தெரு என முகவரியிட்ட உரிமம் பெற்ற நில அளவையர் சங்கத்தினரிடமிருந்து கையொப்பமிடாத முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 24.11.2017 அன்று பெறப்பட்டது. 2015–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் (குற்றச்சாட்டு தாக்கல், விசாரித்தல் மற்றும் தீர்வு செய்யப்படுதல் முறைகள்) விதிகளின்படி முறையீட்டு மனு முறையாகத் தாக்கல் செய்யப்படாத நிலையிலும் முறையீட்டு மனுவின் தன்மையைக் கருத்தில் கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. முறையீட்டு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள தாம்பரம் நகரமைப்பு ஆய்வாளர் திரு S. குமார் மீதான குற்றச்சாட்டுகள் மற்றும் அக்குற்றச்சாட்டுகள் சம்பந்தமாக சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையர்களின் அறிக்கை மற்றும் விசாரணையின் போது குற்றம் சாட்டப்பட்ட அலுவலர் அளித்த வாக்குமூலம் ஆகியன பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை, தாம்பரம் மேற்கு, எண்.33, சிவசண்முகம் தெரு என முகவரியிட்ட கையொப்பமிடாத முறையீட்டு மனுவில் தாம்பரம் நகரமைப்பு ஆய்வாளர் திரு S. குமார் குறித்து கீழ்க்காணும் புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

(1) தனது சொந்த ஊரான தேனி மாவட்டத்திற்குட்பட்ட சின்னமனூர், போடி (ம) குச்சனூர் பகுதிகளில் பல நூறு ஏக்கர் நிலங்கள் வாங்கியது ;

(2) கொடைக்கானல், ஊட்டி பகுதிகளில் பல அடுக்குமாடி குடியிருப்புகள் வாங்கி வாடகைக்கு விட்டது ;

(3) நகராட்சித் தலைவர்களையும் ஆணையாளர்களையும் ஏமாற்றி தனி நபர்கள் மூலம் கையூட்டு வாங்குவது ;

(4) கையூட்டு பெற்றதன் வகையில் ரூ.300 கோடிக்கு சொத்து சேர்த்துள்ளது.

2. மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் சம்பந்தமாக தாம்பரம், திருவேற்காடு நகராட்சி ஆணையர்களின் அறிக்கை பெறப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டுள்ள நகரமைப்பு ஆய்வாளர் திரு S. குமார் திருவேற்காடு நகராட்சியில் நகரமைப்பு ஆய்வாளர் பொறுப்பினை வகித்த காலத்தில் அயனம்பாக்கம் கிராமத்தில் ஸ்டெர்லிங்*பிரதான் என்ற கட்டட நிறுவனத்திற்கு மனை உட்பிரிவு மற்றும் கட்டட அனுமதி வழங்கியது சம்பந்தமாக ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உரிய விசாரணைக்குப் பின் நகராட்சி நிர்வாக ஆணையரின் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது என திருவேற்காடு நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். தாம்பரம் நகராட்சியில் 10.07.2017 முதல் நகரமைப்பு ஆய்வாளராக திரு S.குமார் பணியாற்றி வருவதாகவும், பாகப்பிரிவினை மற்றும் தானமாகப் பெற்ற சொத்து விவரங்கள் அனைத்தும்

தனியரது பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று தாம்பரம் நகராட்சி ஆணையர் தனது 14.12.2018 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார். மேலும், குற்றம் சாட்டப்பட்டுள்ள திரு S. குமார் கிழக்குத் தாம்பரம் பகுதிகளுக்குட்பட்ட நகரமைப்பு பிரிவு பணிகளை மேற்கொண்டு வருவதாகவும், எந்தவித புகாருக்கும் இடமில்லாத வகையில் செயல்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும், உரிமம் பெற்ற நில அளவையர் சங்கம் என்ற ஒரு அமைப்பு மேற்குறிப்பிட்ட முகவரியில் செயல் படவில்லை என்றும் தாம்பரம் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. குற்றம் சாட்டப்பட்ட நகரமைப்பு ஆய்வாளர் திரு S. குமார் அவர்களிடம் 21.12.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. தனக்கு தேனி மாவட்ட கிராமங்களிலும், கொடைக்கானல் மற்றும் ஊட்டியிலும் சொத்துக்கள் ஏதும் இல்லை என்று விசாரணையின் போது தெரிவித்தார். கோப்புகள் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளில் தன்னால் எந்தவொரு ஆணையும் பிறப்பிக்க இயலாது என்றும் தெரிவித்தார். மக்கள் செய்தி மையம் என்ற போலி பத்திரிக்கையின் ஆசிரியர் அன்பழகன் என்பவரோடு தொடர்பில் உள்ள ஆவடி நகராட்சியில் பணிபுரியும் தினகரன் என்பவர்தான் தன் மீதான ஆதாரமற்ற புகார்களை தெரிவித்திருப்பார் என சந்தேகப்படுவதாகவும் விசாரணையின் போது தெரிவித்தார். தான் பணியில் சேர்ந்து 30 ஆண்டுகள் ஆகிறது என்றும் இது வரை தன் மீது யாதொரு குற்றம் குறைகள் இல்லை என்றும் விசாரணையின் போது தாக்கல் செய்த கடிதத்தில் தெரிவித்துள்ளார். தாம்பரம் நகராட்சி ஆணையரும் 21.12.2018 அன்று நடந்த விசாரணைக்கு வருகை தந்தார். 14.12.2018 நாளிட்ட கடிதத்தில் சமர்ப்பித்த அறிக்கையினையே தனது வாக்குமூலமாக ஏற்குமாறு கேட்டுக்கொண்டார்.

4. குற்றம் சாட்டப்பட்ட தாம்பரம் நகரமைப்பு ஆய்வாளர் திரு S. குமார் குறித்த புகார்களுக்கு உரிய ஆதார ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், முறையீட்டு மனுவில் உரிய கையொப்பமிட்டு அனுப்பப்படாத நிலையிலும், அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள அனுப்புநர் முகவரியில், உரிமம் பெற்ற நில அளவையர் சங்கம் என்ற ஒரு அமைப்பு செயல்படாத நிலையிலும் மனுதாரரிடம் உரிய விசாரணை மேற்கொள்ளப்படவில்லை. எனினும் தனது பணிக்காலத்தில் சட்ட விதிகளுக்குட்பட்டே தனது பணிகளை செய்து வருவதாகவும், இதுவரை தன் மீது யாதொரு புகாரும் தெரிவிக்கப்படவில்லை என்று எதிர்மனுதாரரான திரு S.குமார் குறிப்பிட்டுள்ளதையும் ஏற்பதற்கில்லை. திருவேற்காடு நகராட்சியில் நகரமைப்பு ஆய்வாளராக (பொறுப்பு) பணியாற்றியபோது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையரின் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் இம்முறைமன்ற நடுவம் கவனத்தில் கொண்டுள்ளது. எனினும், இந்நேர்வில் குற்றச்சாட்டுகளுக்கு உரிய ஆதார ஆவணங்களை சமர்ப்பிக்கப்படாத நிலையில் தாம்பரம் நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் திரு S. குமார் மீதான நடவடிக்கையை இந்நிலையிலேயே முடித்துக் கொள்ள முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

**2018–** ஆம் ஆண்டு, **டிசம்பர்** திங்கள், **24–**ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

31/12/2018

செயலாளர்.

31-12-18

31/12/18

பெறுநர்

1. **திரு S. குமார்,**
   **நகரமைப்பு ஆய்வாளர்,**
   **தாம்பரம் நகராட்சி,**
   **தாம்பரம் – 600 045.**

2. **நகராட்சி ஆணையர்,**
   **தாம்பரம் நகராட்சி,**
   **தாம்பரம் – 600 045.**

நகல் : **முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்**
**பிரிவு அலுவலர் (நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு – 3**
**இ.கோ. / உதிரி**